பக்கங்கள்: 06
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 29 புதன்கிழமை 15.12.2021 கதிர் 268

## நயினாதீவில் சடலம் மீட்பு!

யாழ்., நயினாதீவு தண்ணீர்த்தாங்கி குளத்துக்கரை அருகே அடையாளம் காணப்படாத ஆண் ஒருவரின் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது. ☞2

# எதிர்ப்புகளை முறியடித்து வென்றார் மணிவண்ணன்!

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் ‘பட்ஜட்’ 3 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்



யாழ்ப்பாணம்,டிசெம்பர்15

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் மணி வண்ணன் அரசியல் எதிர்ப்புகளை முறி யடித்து, தாம் சமர்ப்பித்த தமது சபையின் வரவு – செலவுத் திட்டத்தை மூன்று மேல திக வாக்குகளால் நிறைவேற்ற வைத்து வெற்றி பெற்றார். ☞2

## பருத்தித்துறை முனைப் பகுதியை பார்வையிட்டனர் சீன அதிகாரிகள்




(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக்கான சீனத் தூதரக அதிகா ரிகள் யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தந்துள்ளனர்.

அவர்கள் பருத்தித்துறை முனைப் பகுதி யைப் பார்வையிட்டனர் .

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையில் சீன அதிகாரிகள் இரண்டு நாள் பயணமாக வடக்கு மாகா ணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

## யாழ். பல்கலைக்கழகம் அருகில் வாள்வெட்டு!

### இளைஞர் ஒருவர் படுகாயம்



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், திருநெல்வேலி - பரமேஸ்வரா சந்திப் பகுதியில் இளைஞர் ஒருவரை கும்பல் ஒன்று துரத்தி துரத்தி வாளால் வெட்டியுள்ளது.

சன நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் அந்தப் பகுதியில் இன்று முற்பகல் 10.30 மணியளவில் ☞2

## யாழ். பொது நூலகத்தை பார்வையிட்ட சீனத் தூதர்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் பிரதான நூலகத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான சீனத் தூதுவர் மேளவாத்தியம் மற்றும் நட னங்களுடன் வரவேற்கப்பட டார்.

யாழ்ப்பாணம் மாநகர ☞2

## பெண்ணொருவர் சுட்டுப் படுகொலை

### நெடுங்கேணியில் சம்பவம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, நெடுங்கே ணிப் பகுதியில் பெண் ஒருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட் டுள்ளார்.

இன்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, நெடுங்கேணி, சேனைப்புலவு பகுதியில் மோட்டடார் சைக்கிளில் பய ணித்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் மீது துப்பாக்கி யால் சுட்டுவிட்டு நபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த துப்பாக்கிச் சூட்டுக்கு ☞2

## தந்தையும் மகளும் விபத்தில் மரணம்!

தெற்கு அதிவேக நெடுஞ் சாலையில் ஏற்பட்ட விபத்தில் காரில் பயணித்த 4 வயது மக ளும் தந்தையும் பலியாகியுள்ள னர். அத்துடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு அதிவேக ☞2

## வல்வெட்டித்துறை நகர பிதாவாக மீண்டும் செல்வேந்திரா தெரிவு!



(ந.லோகதயாளன்)

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவராக சபாரத்தினம் செல்வேந்திரா மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் ☞2

## வவுனிக்குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற இளைஞர் நீரில் மூழ்கி பரிதாபச் சாவு!

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, வவுனிக்குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற இளைஞர் படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அம்பாள்புரம் 5ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த விஜ யரட்ணம் நிலவன் (வயது 24) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வவுனிக்குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற வேளை, ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## நயினாதீவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த நபர் பல நாள்களுக்கு முன் இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படு கின்றது.

உருக்குலைந்த நிலையில் சடலம் காணப்படுவதால் இதுவரை அடை யாளம் காணப்படவில்லை.

கடந்த வியாழக்கிழமையில் இருந்து நயினாதீவைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காணாமல்போயிருந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பொலிஸாரால் ஊர்காவற்றுறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

## யாழ். பல்கலைக்கழகம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற இந்தச் சம்பவம் அப்பகுதி யில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி யுள்ளது.

யாழ். நகர்ப் பகுதியை நோக்கி குறித்த இளைஞர் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது, இரண்டு மோட்டார் சைக்கிள் களில் பின் தொடர்ந்த நால்வர் இளை ஞரை பரமேஸ்வரா சந்தியில் வழி மறித்து வாள்வெட்டை மேற்கொண் டனர்.

கும்பலின் தாக்குதலில் இருந்து தப் பித்து, பல்கலைக்கழகம் பக்கமாக இளைஞர் தப்பியோடியபோதும் அவர் துரத்தித் துரத்தி வாளால் வெட்டப்பட்டார்.

வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாய மடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளார். தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அரு கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றமை மாணவர்கள் மத்தியில் அச்ச நிலை மையை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யாழ். பொது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேயர் வி.மணிவண்ணன் மற்றும் ஆணையாளர் த.ஜெயசீலன் ஆகியோர் தூதுவரை வரவேற்றனர்.

நூலகத்தில் உள்ள இந்தியத் தூத ரகத்தால் அமைக்கப்பட்ட அப்துல் கலாம் உருவச்சிலை உள்ளிட்ட பகுதிகளையும் தூதுவர் பார்வையிட்டு நூலகத்துக்கு அன்பளிப்பும் வழங்கினார்.

இதன்போது நூலகத்துக்கு மடிக் கணினி மற்றும் புத்தகங்கள் அன்பளிப் புச் செய்யப்பட்டன.

## பெண்ணொருவர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்காகிய சேனைப்புலவைச் சேர்ந்த சத்தியகலா (வயது 31) என்ற பெண் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள் ளார்.

சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை ஆரம் பித்துள்ளனர்.

குறித்த பெண் மீது இடியன் துப்பாக்கி யைப் பயன்படுத்தி சூடு மேற்கொள்ளப்பட் டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளமையுடன், விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (100)

## எதிர்ப்புகளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் யாழ். மாநகர மேயர் சட் டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண் ணனால் இன்று காலை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதங்களையடுத்து அதன் மீது பகிரங்க வாக்கெடுப்பு இடம்பெற்றது.

திட்டத்துக்கு ஆதரவாக மேயர் அணி யைச் சேர்ந்த 10 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 10 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும் என 24 பேர் வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்களும் என 21 பேர் எதிராக வாக்களித்தனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

## தந்தையும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெடுஞ்சாலையில் மில்லனிய பிரதேசத் தில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரி ழந்துள்ளனர்.

விபத்துக்குள்ளான காரில் பயணித்த தந்தையும் (வயது-39) மகளுமே (வயது-4) இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்து சம்பவத்தில் மேலும் மூவர் காயமடைந்து வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## வல்வெட்டித்துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதீடு கடந்த மாதம் இரு தடவைகள் தலைவர் ச. செல்வேந்திராவால் சமர்ப் பிக்கப்பட்ட நிலையில் தோற்கடிக்கப்பட் டது.

இதையடுத்து இன்று புதிய தலை வருக்கான தெரிவு இடம்பெற்றது.

இதன்போது மீண்டும் சுயேச்சைச் குழு சார்பில் செல்வேந்திரா போட்டியிட்ட நிலையில் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622


## வவுனிக்குளத்தில் மீன்பிடிக்கச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி குறித்த இளைஞர் காணாமல்போயிருந்த நிலை யில், குளத்தினுள் தேடுதல் மேற்கொண்ட நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள் ளார். மீட்கப்பட்ட இளைஞரின் சடலம் மாங்குளம் வைத்தியசாலையில் ஒப் படைக்கப்பட்டுள்ள நிலையில் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர்.


மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற
பல்சுவை வார இதழ்
செம்மணி
73ஆவது இதழ்
வெளிவந்துவிட்டது
வாசித்துவிட்டீர்களா?
- வலியின்றி உயிர் மாய்ப்பு
- பிரியந்த குமாரவைக் கொன்றவர்களும் கறுப்பு ஜூலைக் காடையர்களும்...!
- உவர் இப்ப ஆரோட நிக்கிறார்...?
- தப்பிப் பிழைக்குமா தலை?
- ஓயாது பிழை சொல்வதே பெண்ணின் அடையாளமா?
மேலும் பல சுவையான அம்சங்களுடன்

உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள்
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியாவும் 13வது திருத்தமும்

தமிழர் அரசியலில் இப்போது பிரதான பேசுபொருள் 13ஆவது அரசமைப்புத் திருத்தம்தான்.

தமிழர்களை பொறுத்தவரை 13ஆம் திருத்தம் என்பது கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத பொருள்.

அது மாத்திரமல்ல, கடவுள் இடம் கொடுத்தாலும் பூசாரி இடம் கொடுக்காதமை போன்ற சிக்கல்.

இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் தேடி, இந்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிட்ட போது உருவானது இலங்கை – இந்திய ஒப்பந்தம்.

அதன் வாசகங்களுக்குச் சட்ட வடிவம் கொடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்டதே 13ஆவது திருத்தம்.

அதன் மூலம் தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கு அதிகாரம் சட்ட ரீதியாகப் பகிரப்பட்டது எனக் கூறப்பட்டாலும், அது வெறும் காகிதத்துடன் இருந்ததே தவிர செயல் வடிவம் பெறவேயில்லை.

13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழர் தரப்பின் முக்கியமான கரிசனைகளை இந்தியா கவனத்தில் கொள்ள வேண்டும்.

✦ 13ஆவது திருத்தத்தின் உருவாக்கம் என்பது தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றவும், இலங்கை – இந்திய உடன்பாட்டு வாசகங்களை நடைமுறைப்படுத்தவுமே கொண்டுவரப்பட்டது. முதலில் இந்த இரண்டு விடயங்களையுமே பதின் மூன்றாம் திருத்தம் நிறைவேற்றவில்லை என்பதைத் தரப்புகள் கவனத்தில் கொள்ளவேண்டும். 13ஆம் திருத்தம் தங்களின் அறியாமைகளைத் தீர்ப்பதற்கு போதுமான ஏற்பாடல்ல என்பது அப்போதே – 13ஆம் திருத்தம் வந்தபோதே – தமிழ்த் தரப்பினரால் தெளி வாக வெளிப்படுத்தப்பட்டு விட்டது. அது மாத்திரமல்ல, தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கில் ஒரு தனித்துவ இனமாக அவர்கள் வாழ்வதற்கான அதிகாரப் பகிர்வை இலங்கை – இந்திய ஒப்பந்தம் வலியுறுத்திய போதும், 13ஆவது திருத்தத்தில் அது தொடர்பில் போதுமான – உறுதியான – ஏற்பாடுகள் இடம்பெறவேயில்லை.

✦ 13ஆவது திருத்தத்தின் மூலம் – அரசமைப்பு உறுதியுரைகளின் மூலம் – பகிரப்பட்ட அதிகாரங்கள், குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படவேயில்லை.

✦ வழங்கப்பட்ட – பகிரப்பட்ட – கொஞ்சநஞ்ச அதிகாரங்கள் கூட, காலத்துக்கு காலம் புதிய புதிய சட்டங்கள் மூலம் மத்திய அரசினால் பிடுங்கி எடுக்கப்பட்டன.

பதின்மூன்றாவது திருத்தம் குறித்து அதிகம் பேசும் தமிழர் தரப்புகள் இந்த மூன்று விடயங்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும்

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இது தொடர்பாக நடந்த தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தை ஒட்டிக் கருத்து வெளியிட்ட தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

13ஆவது திருத்தம் இருக்கும் வரை தான் இந்த விடயத்தில் இந்தியாவின் பிடிமானம் – செல்வாக்கு – இருக்கும். புதிய அரசமைப்பு வந்து, அதில் 13ஆவது திருத்தம் என்ற சட்ட ஏற்பாடு இல்லாமல் போகும் போது இந்தியாவின் அழுத்தம் அற்றுப் போய்விடும் என்று சாரப்பட அவர் கருத்து வெளியிட்டிருந்தார். அது பிழையான கற்பிதம் தரும் கருத்தாக அமையக் கூடும்.

இலங்கையில் அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்தியச் செல்வாக்கு என்பது, இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக நிலை நிறுத்தப்பட்டது. புதிய அரசமைப்பு வந்து அந்த அமைப்பில் 13ஆவது திருத்தம் என்ற ஏற்பாடு அடிபட்டுப்போனாலும், இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் அந்தச் செல்வாக்கும், கடப்பாடும், பங்களிப்பும் இந்தியாவுக்கும் நீடிக்கவே செய்யும். அதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

## மக்களுக்காக சட்டத்தை தாண்டியும் செயற்படுவோம்; முடிந்தால் என்னைக் கைதுசெய்யுங்கள் பார்க்கலாம்!

### வடக்கு ஆளுநருக்கு சுமந்திரன் எம்.பி. கடும் தொனியில் சவால்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ.15

காணி அளவீட்டின்போது நில உரிமையாளர்கள் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுகின்றமை சட்ட ரீதியிலான உரிமை அதனை எவருமே தடுக்க முடியாது. நாம் சட்டப்படி செயற் படுவோம். தேவைப்பட்டால் எமது மக்களுக்காகச் சட்டத்தைத் தாண்டியும் அரசியல் நிலைவரப்படி செயற்படுவோம். முடிந்தால் என்னைக் கைதுசெய்யுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் நேற்றைய தினம் கைதடியில் உள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் நில அபகரிப்பு தொடர்பான விடயம் உரையாடும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் ஆளுநருக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையில் நீண்ட விவாதம் இடம்பெற்றது.

இதன்போது தற்போது குடாநாட்டில் என்ன தேவைக்காக மக்களின் நிலங்கள் சுவீகரிக்க முயற்சிக்கப்படுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பிய சமயம், அது பொதுத் தேவைக்காக என ஆளுநர் பதிலளித்தார். அந்த பொதுத் தேவை என்ன என்பதுதான் கேள்வி. அதனை விளக்க வேண்டும். அதேநேரம் ஒரு நிலத்தின் உரிமையாளருக்கு தனது காணியை வழங்க விரும்பாத காரணத்தால் தான் எதிர்ப்பு தெரிவிக்கின்றார். அதனை அடக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த போது உரிமையாளர் ஆட்சேபனை தெரிவிக்கலாம். ஆனால் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட முடியாது என்பதோடு நில உரிமையாளர்கள் அல்லாதோர் அங்கே கூட முடியாது என ஆளுநர் தெரிவித்தார்.

இவ்வாறு ஆளுநர் கூறியமையால் நில உரிமையாளரை மீறி அபகரிக்க முயன்றால் அவர்கள் நீதிமன்றை நாடும்போது நீதிமன்றம் முதலில் உங்கள் நிலத்தை சுவீகரிக்க முற்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தீர்களா என்பதையே கோரும். அதனால் எதிர்ப்பு என்பது அவர்களின் சட்டப்படியான உரிமை. அதனை யாரும் தடுக்க முடியாது. இதேநேரம் வேறு ஆக்கள் என நீங்கள் (ஆளுநர்) கூற முற்படுகின்றமை அரசியல்வாதிகளைக் கூறுகின்றீர்கள். அவர்கள் இந்த நில உரிமையாளர்களின் மக்கள் பிரதிநிதிகள். அவர்கள் கண்டிப்பாக வருவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கூறியபோது அதற்கு நாம் சட்டப்படி செய்வோம் என ஆளுநர் கூறினார்.

நீங்கள் அதிகாரிகள் சட்டப்படி மட் டுமே செயற்பட வேண்டும். நாம் அரசியல்வாதிகள் சட்டப்படியும் செயல்படுவோம் சட்டத்தை தாண்டி அரசியல் நிலைவரப்படியும் மக்களுக்காக செயற்படுவோம் சட்டத்தின் பெயரில் வன்முறைக்கு முற்பட்டால் அங்கே நான் பிரசன்னமாவேன் முடிந்தால் கைது செய்யுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கடும் தொனியில் ஆளுநருக்குப் பதிலளித்தார்.

## தலையை அடமானம் வைத்துத்தான் மக்களுக்கான அரசியலை செய்கிறோம்

### ஹரீஸ் பெருமிதம்



நாங்கள் எங்கள் தலையை அடமானம் வைத்துத்தான் சமூகத்துக்கான அரசியலை செய்து வருகிறோம். எங்கள் முடிவுகள் பல வெற்றிகளை சமூகத்துக்காகப் பெற்றுத் தந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றஉறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் 2021ஆம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் தெரிவு செய்யப்பட்ட அம்பாறை மாவட்ட மதஸ் தலங்கள், கழகங்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளுக்கான அலுவலக பாவனை பொருள்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களில் அமைந்துள்ள பிரதேச செயலக கேட்போர் கூடங்களில்பிரதேசசெயலாளர்களின்தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

அடுத்த தேர்தலை வைத்து நாங்கள் அரசியல் செய்வதாக இருந்தால் ஒரு ரூபா கூட செலவில்லாமல் வெறும் வெற்றுக் கோஷத்தோடுமக்களைஉணர்ச்சிவசப்படுத்தி வீதியில் நின்றாலே மக்கள் எம் பின்னால் அணி திரள்வார்கள்.

இந்த அரசியலை நாங்கள் செய்வதற்கு முற்பட்டால் நம் சமூகத்துக்கு ஏற்படும் விளைவுகள் பாரதூரமாக அமைந்து விடுமோ என்ற அச்சம் எங்களுக்குள்ளது. நாங்கள் எங்கள் தலையை அடமானம் வைத்துத்தான் சமூகத்துக்கான அரசியலை செய்து வருகிறோம். எங்கள் முடிவுகள் பல வெற்றிகளை சமூகத்துக்காக பெற்றுத் தந்துள்ளன.

ஆயிரம் ஆயிரம் பிரச்சினைகள் நம் சமூகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றுக்கான தீர்வை நோக்கியே நாம் பயணிக்க வேண்டும். அதை விட்டு விட்டு மக்களை பலிக்கடாவாக்கி நாம் அதிகாரத்துக்கு வர வேண்டும் என்பது பெரும் அயோக்கியத் தனமானதாகவே நாங்கள் பார்க்கிறோம். மருந்து கசப்பானதுதான் அதைப் பருகுவதன் மூலமே நமக்கு பிடித்த நோய் நம்மை விட்டுப் பிரியும். – என்றார்.

# தப்லீக் ஜமாத் அமைப்புக்கு விதிக்கப்பட்டுள்ளது தடை

## சவுதி அரசு அறிவிப்பு



இஸ்லாமியக் கருத்துக்களை, நெறிகளை அந்தச் சமூக மக்களுக்குப் பரப்பிவரும் தப்லீக் ஜமாத் அமைப்புக்கு திடீரெனத் தடை விதித்து சவுதி அரேபிய அரசு உத்தரவிட்டுள்ளது.

தீவிரவாதத்தின் வாயில்களில் ஒன்று என்று சவுதி அரேபிய அரசு தப்லீக் ஜமாத் அமைப்பைக் குறிப்பிட்டுள்ளது உலகெங்கும் இருக்கும் இஸ்லாமிய அமைப்புகளையும் மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

உலகெங்கும் பல நாடுகளில் இருக்கும் தப்லீக் ஜமாத் அமைப்புக்குப் பெரும்பாலும் நிதியுதவி சவுதி அரேபியா நாடுகளில் இருந்துதான் சென்று வருவதாகக் கூறப்படுகிறது. இந்தச் சூழலில் சவுதி அரேபிய அரசை தப்லீக் ஜமாத்தைத் தடை செய்தது அதிர்ச்சிக்குரியதாகும்.

சவுதி அரேபியாவைப் பின்பற்றி மற்ற இஸ்லாமிய நாடுகளான மலேசியா, இந்தோனேஷியா, வங்கதேசம், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் என்ன செய்யப்போகின்றன, அங்குள்ள தப்லீக் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது கேள்வியாக இருக்கிறது. சவுதி அரேபிய அரசின் இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சகம் டுவிட்டரில் பதிவிட்ட கருத்தில், டாக்டர் அப்துல் லத்தீப் அல் அல்ஷேக், மசூதிகளில் உள்ள போதனை செய்பவர்களுக்கும், மசூதிகளுக்கும் பிறப்பித்த உத்தரவில், வெள்ளிக்கிழமை தொழுகையின்போது, அல் அஹ்பாப் எனச் சொல்லப்படும் தப்லிக் மற்றும் தவா குழுவுடன் மக்கள் பழகுவதை எச்சரியுங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

சமூகத்துக்கு தப்லீக் ஜமாத்தால் ஆபத்து இருப்தால், மசூதிகள் மக்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும். தவறான வழிகாட்டல், தடம் மாறுதல், ஆபத்து போன்றவை இந்தக் குழுவால் இருக்கிறது. தீவிரவாதத்தின் வாயில்களில் ஒன்றாக இக்குழு இருக்கிறது. சமூகத்துக்கு ஆபத்தான குழுவாக இருப்பதால், தப்லீக் தவா குழுவை சவுதி அரசு தடை செய்கிறது என்றும் சவுதி அரசு தெரிவித்துள்ளது. இஸ்லாத்தில் சன்னி பிரிவைச் சேர்ந்த அமைப்பான தப்லீக் ஜமாத் அமைப்பு இஸ்லாமியக் கருத்துகளை அந்தச் சமூகத்து மக்களுக்குப் போதிப்பதாகும். அவர்கள் இஸ்லாத்தின் பாதையைக் கடைப் பிடித்து வாழ வேண்டும் என்று அறிவுறுத்தும் அமைப்பாகும்.

# மெக்சிக்கோவில் சரக்கு லொறி விபத்தில் 49 பேர் உயிரிழப்பு



மெக்சிக்கோவில் சட்டவிரோத குடியேற்ற வாசிகளை அதிகளவில் அடைத்து ஏற்றிச் சென்ற மூடிய சரக்கு லொறி ஒன்று கவிழ்ந்து பாலமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில், 49 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 58 பேர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு மெக்சிக்கோவில் நெடுஞ்சாலை ஒன்றில் நேற்று இந்தக் கோர விபத்து இடம் பெற்றுள்ளது.

முதல்கட்ட தரவுகளின்படி 49 குடியேற்றவாசிகள் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் மருத்துமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சியாபாஸ் மாநில சிவில் பாதுகாப்பு அலுவலகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் நெடுஞ்சாலை நடைபாதை மற்றும் சரக்கு லொறி உள்ளே கிடப்பதை சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட படங்களில் காண முடிகிறது. பாதிக்கப்பட்டவர்கள் மத்திய அமெரிக்காவில் இருந்து புலம்பெயர்ந்த குடியேற்றவாசிகள் எனத் தோன்றுவதாக, மெக்சிக்கோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விபத்தில் தப்பிப் பிழைத்தவர்களில் சிலர் தாங்கள் கௌதமாலாவைச் சேர்ந்தவர்கள் என்று கூறினர் என மெக்சிக்கோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அளவுக்கு அதிகமானவர்களை ஏற்றிச் சென்றதே இந்த விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் எனவும், அதிகளவு எடையால் சரக்கு லொறி கவிழ்ந்து சாலை அருகே இருந்த இரும்புப் பாலத்துடன் மோதியிருக்கலாம் எனவும் சியாபாஸ் மாநில சிவில் பாதுகாப்பு அலுவலகத்தின் தலைவர் தெரிவித்தார். விபத்துக்குள்ளான லொறியில் குறைந்தது 107 குடியேற்றவாசிகள் இருந்திருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வித்தில் சிக்கிய சரக்கு லொறியில் கணக்கிடப்பட்டதை விட அதிகளவு புலம்பெயர்ந்தவர்கள் இருந்திருக்கலாம். குடிவரவு அதிகாரிகளால் தாங்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக அவர்கள் தப்பியோடியிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கௌதமாலாவின் எல்லை அருகே உள்ள மெக்சிக்கோ பகுதியில் வைத்து புலம்பெயர்ந்தவர்கள் இந்தக் கொள்கலன் லொறியில் ஏற்றப்பட்டுள்ளனர் என தெரியவருகிறது.

மெக்சிக்கோவில் மூடிய சரக்கு லொறிகளில் புலம்பெயர்ந்தவர்களை ஆபத்தான வகையில் இரகசியமாக ஏற்றிக் கடத்தும் நடவடிக்கை அடிக்கடி இடம்பெறுகிறது.

ஆள்கடத்தல்காரர்களால் குடியேற்றவாசிகள் மறைத்துக் கடத்தி செல்லப்படும் சம்பவங்களை தடுக்கும் நடவடிக்கையை மெக்சிக்கோ அதிகாரிகள் முடுக்கிவிட்டுள்ளனர். எனினும் ஆள்கடத்தல் சம்பவங்கள் மிக இரகசியமாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திபெத்திய எழுத்தாளருக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனை



நாடுகடத்தப்பட்ட ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவுக்கு விசுவாசத்தை வெளிப்படுத்தினார் என அறியப்பட்ட திபெத்திய எழுத்தாளரும் கல்வியாளருமான கோ ரொப் கியாட்சோவுக்கு, திபெத்திலுள்ள சீன நீதிமன்றம் 10 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளதாக ரேடியோ ப்ரீ ஆசியா (யூப்பு) தெரிவிக்கிறது.

இதற்கு முன்னதாக கோ ரொப் கியாட்சோ, சீன ஆட்சியின் கீழ் வாழும் திபெத்தியர்கள் மீதான கட்டுப்பாடுகளை விவரிக்கும் புத்தகங்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

மேலும், சிச்சுவானின் நகாபாவில் (சீன மொழியில் அபா) திபெத்திய தன்னாட்சி மாகாணத்திலுள்ள கிர்தி மடாலயத்தை சேர்ந்த 46 வயதான துறவி கோ ரொப் கியாட்சோ, ஒக்ரேபர் 26, 2020 அன்று, சிச்சுவானின் தலைநகர் செங்டுவில் மாநில பாதுகாப்பு முகவர்களினால், அறியப்படாத குற்றச்சாட்டின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

இதற்கிடையில், கியாட்சோ விரைவில் திபெத்தின் பிராந்திய தலைநகரான லாசாவுக்கு அருகிலுள்ள சிறைக்கு மாற்றப்படுவார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. இந்நிலையில் அவர் எந்த குற்றச்சாட்டின் பேரில் தண்டிக்கப்பட்டார் என்பது பற்றிய விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என ரேடியோ ஃப்ரீ ஆசியா கூறியுள்ளது. மேலும் புலம்பெயர்ந்து வாழும் திபெத்திய அறிஞர் ஒருவர் ரேடியோ ப்ரீ ஆசியாவுக்கு கூறியுள்ளதாவது, சீன ஆட்சியின் கீழ் கருத்துச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகளை விவரிக்கும் புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளை எழுதிய கியாட்சோ, திபெத்திய மொழி, மதம் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாக்க வாதிடும் திறந்த மனதுடைய நபர். அத்துடன் அவரது 10 ஆண்டுகால சிறைத்தண்டனையைப் பற்றி கேள்விப்படுவது வருத்தமான செய்தி. இந்த விடயத்தை உடனடியாக கவனிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை, உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச சமூகத்தை நான் அழைக்க விரும்புகிறேன் என அவர் கூறியுள்ளார். இதேவேளை இதற்கு முன்னதாக கடந்த ஒக்ரோபரில், கியாட்சோவின் வழக்கைப் பற்றிக் கேட்டு ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் அனுப்பிய ஜூலை 16 கடிதத்திற்கு, சீன அரசாங்கம் பதிலளித்துள்ளதாவது, பிரிவினையைத் தூண்டும் சந்தேகத்தின் பேரில், கியாட்சோ குற்றவியல் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அவர்களிடம் கூறியது.

# முதல் காகிதமற்ற அரசாக மாறியது டுபாய்

உலகிலேயே 100 சதவீதம் காகிதம் இல்லாத அரசாங்கமாக டுபாய் மாறியுள்ளதாக எமிரேட்ஸ் பட்டத்து இளவரசர் அறிவித்துள்ளார்.

டுபாயில் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் காகிதமில்லா டிஜிட்டல் நகரமாக மாற்றும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 5 கட்டங்களாக பிரித்து பட்டியலிடப்பட்டன.

இதன் 5ஆவது கட்டத்தின் முடிவில், டுபாயில் 45 அரசு துறைகளும் காகிதமற்றவையாக மாற்றப்பட்டன. இதன்மூலம், உலகின் முதல் காகிதமில்லா அரசு என்ற பெருமையை டுபாய் பெற்றுள்ளது. இந்த துறைகள் 1,800 க்கும் மேற்பட்ட டிஜிற்றல் சேவைகள் மற்றும் 10,500 இற்கும் மேற்பட்ட முக்கிய பரிவர்த்தனைகளை வழங்குகின்றன.

இதுகுறித்து, எமிரேட்ஸ் பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இந்த சாதனை புதுமை, படைப்பாற்றல் மற்றும் எதிர்காலத்தில் கவனம் செலுத்தும் பயணம். இது டுபாயின் உலக முன்னணி டிஜிற்றல் மூலதனம் மற்றும் வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியை மேம்படுத்தும். அரசாங்க செயல்பாடுகள் மற்றும் சேவைகளை வடிவமைப்பதில் இது ஒரு முன்மாதிரியாக அதன் நிலையை வலுப்படுத்துகிறது.

இத்திட்டத்தின் மூலம், டுபாய் அரசாங்கத்திற்கு 2,650 கோடி ரூபாய் (35 கோடி அமெரிக்க டொலர்) சேமிக்கப்படுவதுடன், 1.4 கோடிக்கும் அதிகமான மனித வேலை நேரமும் மிச்சமாகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





முல்லைப் பெரியாறு தொடர்பான

# கேரள அரசின் குற்றச்சாட்டை ஆதாரமற்றது என்கிறது தமிழகம்

முல்லைப் பெரியாறு அணையிலிருந்து உரிய முன்னெச்சரிக்கை இல்லாமல் நீர் திறக்கப்படுகிறது என்பது ஆதாரமற்றது என, கேரள அரசின் குற்றச்சாட்டுக்கு உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்துள்ளது.

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக கேரள அரசு மற்றும் பல்வேறு அமைப்புகள் தொடர்ந்த அனைத்து வழக்குகளும் உச்சநீதிமன்றத்தில் நீதிபதி ஏ.எம்.கன்வில்கர் தலைமையிலான அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்துள்ளன.

இதையொட்டி உச்சநீதிமன்றத்தில் நேற்று தமிழக அரசு பதில் மனுவைத் தாக்கல் செய்திருந்தது. அந்த மனுவில், முல்லைப் பெரியாறு அணையில் இருந்து முன்னறிவிப்பின்றி நீர் திறக்கப்படுகிறது என்ற கேரள அரசின் குற்றச்சாட்டு நியாயமற்றது என்றும், ஒரு நாள் முழுவதும் 12 ஆயிரம் கன அடி திறக்கப்பட்டது என்பது உண்மைத் தன்மையற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மணி நேரம் மட்டுமே 12 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டது, இதன்பின்னர் நீர்த் திறப்பு குறைக்கப்பட்டது. அதேபோன்று நீர்த் திறப்பால் பல்வேறு பகுதிகள் பாதிப்படைந்ததாக கேரள கூறும் குற்றச்சாட்டும் அதற்காக அவர்கள் காண்பிக்கும் படங்களும் உண்மைத் தன்மை அற்றவை.

கேரளப் பகுதிகளில் நீர் செல்லும் பாதை பராமரிக்காமல் விட்டதால் நீர் செல்லமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது, எனவே அது கேரள அரசின் குறைபாடு எனவும் தமிழக அரசின் பதிலில் கூறப்பட்டுள்ளது.

# சட்டம், ஒழுங்கு சீராக இருந்தால்தான் தமிழகம் அமைதியாக இருக்குமாம்

## பா.ஜ.க.தலைவர் அண்ணாமலை கருத்து



சட்டம், ஒழுங்கு சீராக இருந்தால்தான் தமிழகம் அமைதியாக இருக்கும் என பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்திருக்கிறார்.

நெல்லையில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட அலுவலகத்தை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அண்ணாமலை, அடுத்த மூன்று மாதத்தில் தமிழகத்தில் நிர்வாக ரீதியாக உள்ள பாரதிய ஜனதா கட்சி மாவட்டங்களில் 19 இடங்களில் புதிய கட்சி அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படவுள்ளன.

சட்டம், ஒழுங்கு நன்றாக இருந்தால்தான் தமிழகம் அமைதியாக இருக்கும். தற்போதும் தமிழகத்தில் அடிப்படைவாதிகள் இயங்கி வருகின்றனர், தமிழகத்தில் பொலிஸ் தடையின்றிப் பணி செய்ய தமிழக அரசு அனைத்து வழிகளையும் செய்யவேண்டும், எனத் தெரிவித்தார்.

தமிழக அரசு, பொலிஸ் உதவி ஆய்வாளர்களுக்கு போதிய அதிகாரத்தைக் கொடுக்கவில்லை, இதுவரை பார்த்திராத பல்வேறு வழக்குகளை தற்போது தமிழகம் சந்தித்து வருகிறது. தமிழகத்தில் எந்த நேரத்தில் உள்ளாட்சித் தேர்தல் வந்தாலும் பா.ஜ.க. தயார் நிலையில் உள்ளது. உள்ளாட்சித் தேர்தலை கட்சியை வளர்ப்பதற்கான வாய்ப்பாகவே பா.ஜ.க. பார்க்கிறது. அனைத்து இடங்களிலும் பா.ஜ.க. வெற்றி பெறும் எனச் சொல்லவில்லை, ஆளும் கட்சியின் பண பலம், படை பலம் ஆகியவையும் உள்ளன.

இப்போது தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தில் ஊழல்கள் தலை தூக்கி வருகின்றன. அ.திமு.க. - பா.ஜ.க. கூட்டணி ஒரே கப்பலில் பயணம்செய்கிறது. கப்பல் நன்றாக நேராக போய்க்கொண்டிருக்கிறது, அ.தி.மு.க. -பா.ஜ.க. கூட்டணியானது, தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி போன்று இல்லை. தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிட்டு தி.மு.கவுடன் இணைத்துக்கொண்டால் மக்கள் வாக்களிக்கும்போது சின்னத்தை பார்த்து குழம்பாமலாவது இருப்பார்கள். தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு காங்கிரஸ் கட்சியின் தன்மையே இல்லை, தி.மு.க.வின் பி - டீமாகத்தான் தமிழ் காங்கிரஸ் கட்சி செயல்படுகிறது, எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத்தில் ஜனநாயகப் படுகொலை காங்கிரஸ் எம்.பி. ராகுல்காந்தி குற்றச்சாட்டு



நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பேச அனுமதிக்கப்படுவதில்லை என்றும், இதன் மூலம் ஜனநாயகப் படுகொலை நடப்பதாகவும் காங்கிரஸ் எம்.பியான ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாநிலங்களவையில் 12 எம்.பிக்கள் இடை நீக்கம் செய்யப்பட்ட உத்தரவை திரும்பப் பெறக்கோரி டெல்லியில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் பேரணியாகச் சென்றனர். அப்போது பேசிய ராகுல் காந்தி, நாடாளுமன்றத்தில் மசோதாக்கள் கூச்சல் குழப்பங்களுக்கு இடையில் அவசர அவசரமாக நிறைவேற்றப்படுவதாக விமர்சித்தார். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த எந்தப் பிரச்சினைகள் குறித்தும் பேச எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்றும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

12 எம்.பிக்களை இடைநீக்கம் செய்தது ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் செயல் என்றும் ராகுல் குற்றஞ்சாட்டினார். எதிர்க்கட்சிகளின் கேள்விகளை தவிர்ப்பதற்காக பிரதமர் நாடாளுமன்றத்திற்கே வருவதில்லை என்றும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

# தமிழக முதல்வர் ஸ்டாலினைச் சந்தித்தார் தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ்



தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை, தெலங்கானா முதலமைச்சர் சந்திரசேகரராவ் குடும்பத்துடன் சந்தித்து, தான் கட்டியுள்ள கோவிலின் திறப்பு விழாவுக்கு அழைப்பு விடுத்தார்.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இல்லத்துக்கு தெலங்கானா முதலமைச்சர் சந்திரசேகர ராவ் குடும்பத்தினருடன் சென்று சந்தித்துள்ளார். அவர்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், அவரது மகனும் சட்டமன்ற உறுப்பினருமான உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட குடும்ப உறுப் பினர்கள் வரவேற்று உரையாடி யுள்ளனர். இந்தச் சந்திப்பின்போது ஹைத ராபாத் அருகே கட்டப்பட்ட லட்சுமி நரசிம்ம சாமி கோவில் திறப்பு விழாவில் பங்கேற்க தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு, தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ் அழைப்பு விடுத்துள்ளார்.

# தமிழ்மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸுடன் அமெரிக்கா பேச்சு

சமகால அரசியல் நிலைவரங்கள் மற்றும் கடற்றொழில்சார் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து இலங்கைக்கான அமெரிக்க பதில் தூதுவர் மார்டின் ரிஹீலி கலந்துரையாடினார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் கடந்த திங்கட்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பின்போது, தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகக் கேட்டறிந்த அமெரிக்க பதில் தூதுவர், தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பாக தமிழர் தரப்புக்களிடம் ஒருமித்த கருத்து நிலவுவது முக்கியம் என்ற கருத்தை முன்வைத்தார்.



இந்நிலையில் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத – நியாயமான வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற தரப்புக்களுடன் இணைந்து செயற் படுவதற்கான சமிக்ஞைகளை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகிறேன் எனவும், ஆனால் ஏனைய சில தரப்புக்கள் சுயலாபங்களுக்காக மக்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய தோற்றுப்போன வழிமுறைகளையே தொடர்ந்தும் பேசுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த காலங்களில் தன்னால் வெளிப்படுத்தப்பட்ட எதிர்வுகூறல்கள் சரியானவை என்பதை வரலாறு நிரூபித்திருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

மேலும், காணாமல் போனோர் விவகாரத்துக்குப் பரிகாரம் காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அணுகுமுறைகள் தொடர்பாகவும் புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆர்வம் வெளியிட்டுள்ள நிலையில், அது தொடர்பில் தன்னால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விடயங்கள் தொடர்பாகவும் அமெரிக்கத் தரப்பிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெளிவுபடுத்தினார்.

அதேபோன்று, கடற்றொழில் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும், கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டமையுடன் அமெரிக்காவின் உதவித் திட்டங்கள் பற்றியும் அவற்றின் அவசியம் பற்றியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமெரிக்காவின் இலங்கைக்கான பதில் தூதுவருடன் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தபால் சேவைகள் மலையகத்தில் பாதிப்பு

மலையகத்தில் தபால் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தால், தபால் சேவைகள் பாதிப்புக்குள்ளாகி உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, தபால் சேவை ஊழியர்கள், நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த தொழிற்சங்க நடவடிக்கை, நேற்று நள்ளிரவு வரை முன்னெடுக்கப்பட்டதாக தபால் சேவை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். அகில இலங்கை தபால் சேவை மற்றும் தொலைத் தொடர்பு ஊழியர்கள் ஒன்றிணைந்து இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதற்கமைய, புதிய சேவை சட்ட மூலமொன்றை ஸ்தாபித்தல், சனிக்கிழமை கொடுப்பனவில் 20 வீதத்தை வழங்குதல், வெற்றிடங்களை நிரப்புதல் போன்ற 16 அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

# பஸ்ஸில் தவறவிடப்பட்ட தாலிக்கொடியை ஒப்படைத்த வவுனியா தனியார் பஸ் சாரதி

வவுனியா மாவட்ட பஸ் உரிமையாளர் சங்கத்தில் ஒப்படைக்கப்பட்ட தாலிக்கொடி உட்பட வங்கி ஆவணங்கள் சிலவற்றை நேற்று (செவ்வாய்க்கிழமை) தனியார் உரிமையாளர் சங்கத்தின் பணிமனையில் வைத்து பேருந்து சங்கத்தின் தலைவர் சு.இராஜேஸ்வரால் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது .



இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் –

கடந்த திங்கட்கிழமை வவுனியா மாவட்ட பஸ் உரிமையாளர் சங்கத்தின் ஆளுகைக்குட்பட்ட என்.டி.-7038 இலக்கமுடைய பஸ்ஸில் பயணம் மேற்கொண்ட கிளிநொச்சி நகரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பஸ்ஸிலிருந்து இறங்கும்போது தவறுதலாக தனது கைப்பை ஒன்றை பஸ்ஸில் தவறவிட்டு இறங்கியுள்ளார்.

அதனை பார்வையிட்ட தனியார் பஸ்ஸின் சாரதியும், உரிமையாளருமான கே.ஜீவானந்தபவனால் பஸ்ஸில் கைவிடப்பட்ட குறித்த கைப்பை வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டது. கைப்பையில் காணப்பட்ட அடையாள அட்டை ஆவணத்தின் முகவரிக்கு குறித்த உரிமையாளருடன் தொடர்புகொண்டு அவர் பஸ்ஸில் தவறவிட்ட ஐந்து பவுண் தாலிக்கொடி மற்றும் மூன்று வங்கி புத்தகம் என்பவற்றை உரிமையாளருடாக உறுதிப்படுத்திய பின்னர் நேற்று வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் அலு வலகத்தில் வைத்து தலைவரால் ஒப்படைக்கப்பட்டது .

தவறவிட்ட தங்க நகை உட்பட ஆவணங்களை திரும்ப ஒப்படைத்த பஸ் சாரதியின் நேர்மையான நடவடிக்கை தங்கநகைகளைபறிகொடுத்தவருக்கு இன்ப அதிர்ச்சியை கொடுத்த நெகிழ்ச்சியான சம்பவத்தை பலரும் பாராட்டியுள்ளனர்.

# தலைமைத்துவ மாற்றத்தின் கட்டாயத்தை ஆளும்தரப்பு எம்.பிக்கள் விரும்புகின்றனர்

## மயந்த திஸாநாயக்க தெரிவிப்பு



அரசாங்கம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை கொண்டிருந்தாலும் உள்கட்சிப் பிரச்சினைகளால் போராடி வருவதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க, தலைமைத்துவ மாற்றம் தேவையென ஆளும் தரப்பினர் கருதுகின்றனர் எனக் கூறினார்.

அத்தோடு தற்போதுள்ள ஆட்சியை மாற்ற வேண்டும் என்பதே ஆளும் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்களின் கருத்து என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் ஆளும்தரப்பில் உள்ள 40 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியுடன் பேச்சு நடத்தி வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகளால் விரக்தியடைந்துள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள், தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு செல்ல வெட்கப்படுகின்றனர் எனவும் மயந்த திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

# நான்காவது தடுப்பூசியும் வழங்க வாய்ப்புள்ளது!

## ஹேரத் தெரிவிப்பு

எதிர்காலத்தில் நான்காவது கொரோனாத் தடுப்பூசியையும் வழங்குவதற்கான வாய்ப்புள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக, பொதுமக்கள் தடுப்பூசி அட்டையை இயன்றளவு கவனமாகப் பயன்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி அட்டையை தரவு களஞ்சியத்திற்கு உள்வாங்கி, QR கோட் முறைமைக்குள் இணைத்து, கைத்தொலைபேசி ஊடாகவோ அல்லது வேறு முறைமையிலோ பயன்படுத்தும் வரையில், அதனைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கட்டாயமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் எதிர்காலத்தில், மூன்றாம் தடுப்பூசியின் பின்னர், நான்காம் தடுப்பூசியையும் வழங்க வேண்டி ஏற்படலாம் என்றும் எனவே, தடுப்பூசி அட்டையை லெமினேட் செய்வதை தவிர்க்க வேண்டும் எனவும் அவர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.12.2021இல் வெளியிடப்பெற்றது.